அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 09/2016

எனது இலக்கம் : EST/6/04/LON/1040

அரசாங்க நிர்வாக மற்றும்

முகாமைத்துவ அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07.

2016.05.20

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்கள தலைவர்கள்

**<u>தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவினை திருத்தியமைத்தல் - ஆதனக் கடன்</u>**

தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவின் பால் உமது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அப்பிரிவின் 11:8:8 உப பிரிவானது கீழ்வரும் வகையில் திருத்தியமைப்பதற்கும் 11: 8:10 உப பிரிவினை நீக்குவதற்கும் 2016.03.30 ஆம் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

11:8:8 சேவைக் காலத்தினுள் அலுவலர் ஒருவர் காலஞ் சென்றால் அல்லது பூரணமாக செயலிழந்த நிலைமைக்கு உட்பட்டால் அல்லது வைத்திய காரணங்களுக்காக ஓய்வு பெறச் செய்தால் அல்லது அன்றைய தினத்திற்கு வங்கிற்கு செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவையினை மட்டும் கடன் உத்தரவாத நிதியின் மூலம் வங்கியில் ஒரே தடவையில் கணக்குத் தீர்ப்பதற்கு அரசங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

03. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2016.03.30 ஆம் திகதியில் இருந்து வலுவானதாக இருக்கும்.

ஒப்பம்./ ஜே. தடல்லகே

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு